DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 96 /2024**

Deposition of Witness: DW1.

| | | | |
|---|---|---|---|
| Name | அய்யப்பன் | Father Name – ஜெயராஜ் | |
| Age | 47 | Village – | போடிநாயக்கனூர் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2026.

**பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை.**

நான் இவ்வழக்கில் பிரதிவாதி. பிரதிவாதி தரப்பு முதல் சாட்சியாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் படித்துப் பார்த்து கையெழுத்திட்டு தாக்கல் செய்துள்ளேன்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 பரிவர்த்தனை பத்திரம் நானும் வாதியும் ஏற்படுத்திக்கொண்டது என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 பரிவர்த்தனை பத்திரத்தில் A Schedule 1வது லக்க சொத்தாகவும் B schedule 2வது லக்க சொத்தாகவும் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் B schedule சொத்து என்னுடைய சொத்து என்றால் சரிதான். A Schedule சொத்து வாதியின் சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள B schedule சொத்தை எனது தந்தை வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். வாதிக்கு பாத்தியப்பட்ட A Schedule சொத்தை வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில் கட்டுப்பட்ட சொத்தை பொறுத்துதான் பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான், ஆனால் வாதியின் உறவினர்கள் கட்டாயப்படுத்தியதால் தான் பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்தப்பட்டது. வா.சா.ஆ.3 பரிவர்த்தனைபத்திரத்தை வா.சா.ஆ. 4 பத்திரம் மூலம் ரத்து செய்துவிட்டேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் என்னுடைய தந்தை 1988ம் ஆண்டு கிரையம் வாங்கிய வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை நான் அனுபவித்துகொள்ள வேண்டும் என்றும், 1991ம் ஆண்டு கிரையம் வாங்கிய வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை வாதி அனுபவித்து வரவேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆவணங்களின் அடிப்படையில் வாதியும் நானும்

சொத்துக்களை அனுபவித்து வருவதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் ஆட்சேபனை உள்ளது, வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் வாதி மோசடியாக எங்களுக்கு பாத்தியப்பட்ட படிக்கட்டுகளையும் சேர்த்து பதிந்துள்ளார், இது சம்மந்தமாக என்னுடைய தந்தை 1991ம் ஆண்டே சார்பதிவாளருக்கு ஆட்சேபனை கடிதமும் அனுப்பியுள்ளார். எனது தந்தை சார்பதிவாளருக்கு ஆட்சேபனை கடிதம் அனுப்பினார் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1, 2 ஆவணங்கள் உண்மையானது என வா.சா.ஆ.3, 4 ஆவணங்களை நான் ஏற்படுத்திக்கொண்டதால் வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு எதிராக நான் செய்யும் எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்குரை 1, 2 லக்க சொத்துக்களை வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று நான் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் நான் விளம்புகை பரிகாரம் கோர அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, வா.சா.ஆ.4 ஆவணங்களுக்கு விரோதமாக வழக்குரை 2ம் லக்க சொத்தில் உள்ள படிக்கட்டுகளை வாதியின் அனுபவத்தை பாதிக்கும் வகையில் அடைத்து கட்டிடம் கட்டியுள்ளதால் வாதிக்கோரிய செயலுறுத்துக்கட்டளை வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, 3, 4 ஆவணங்களுக்கெதிராக நான் செய்யும் வாய்மொழி எதிர்வாதமும் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. வழக்குரை 2ம் லக்கசொத்தின் முதல் தளத்தில் 8 கடைகள் கட்டியுள்ளதாக நான் கூறுவதற்கு நான் உரிய அதிகாரிகளிடமிருந்து கட்டிட அனுமதி வாங்கி அதை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கட்டிட அனுமதி உள்ளது ஆனால் அதை தாக்கல் செய்யவில்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் வழக்குரை 2ம் லக்கசொத்தில் சொந்த பயன்பாட்டிற்கும் உபயோகத்திற்கும் மாடிப்படி அமைத்து அனுபவித்து வருகிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் அவ்வாறு சொல்லியுள்ளது சட்டவிரோதமானது என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A
Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.02.17 10:15:51 +0530

District Munsif,
Bodinayakanur.